S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 02 சனிக்கிழமை [19-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 319

# சரவணையிலிருந்து நேற்று அல்லைப்பிட்டி பகுதிக்கு இராணுவம் நகர்ந்தது!

## மும்முனைத் தாக்குதல் தீவிரம்

யாழ்ப்பாணம், அக். 19

சரவணை சின்னமடுப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று மும்முனைத் தாக்குதல்களை நடத்தியவாறு அல்லைப்பிட்டி வரை முன்னேறி வந்தனர்.

நேற்றுக் காலை 5 மணியளவில் அவ்ரோக்கள், பொம்மர்கள், ஹெலிகள் வானத் தாக்குதலை நடத்த— தீவகக் கடற்பகுதியிலிருந்து கடற்படைப் படகுகள் பீரங்கிக் குண்டுகளை முழங்க— கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியபடி படையினர் முன்னேறினர்.

இரண்டு அவ்ரோக்கள்,

[8 ஆம் பக்கம் பார்க்க]

## மண்டைதீவுப் பகுதியில் நேற்று மாலை குண்டு வீச்சு

பண்ணைப் பாலத்துக்கும் மண்டைதீவுச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இப்பகுதியில் நேராக ஐந்து குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் ஒன்று வெடிக்கவில்லை. ஏனைய குண்டுகள் கடலினுள் விழுந்தே வெடித்தன.

இதனால் இரு படகுகள் சேதம் அடைந்தன. வீதி வழியாகப் பலர் சென்று கொண்டிருந்த போதும், தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

[ஓ-131-167-15-125]

## மண்கும்பான், சாட்டியில் நேற்று புகைமண்டலம்

யாழ்ப்பாணம், அக். 19

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முன்னேறி நிலைகொண்டிருக்கும் மண்கும்பான், சாட்டி பகுதியில் நேற்று மாலை பெரும் புகைமண்டலம் எழுந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

படையினர் இப்பகுதியில் உள்ள வீடுகளுக்குத் தீ வைத்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை —

மண்டைதீவு கடற்பகுதியில் படையினரின் இரண்டு பீரங்கிப் படகுகள் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-125]

## படையினரின் இரு படகுகள் அராலி கடலில் தரைதட்டின

தம்பாட்டிப் பகுதியிலிருந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் இரண்டு விசைப் படகுகள் அராலி கடற் பிரதேசத்தில் உள்ள ஆழம் குறைந்த மேட்டுப் பகுதியில் தரைதட்டி நின்றதாக நேற்று மாலை அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

விசைப் படகுகள் தரை தட்டி நின்ற பகுதிக்கு மேலாக ஹெலி ஒன்று நேற்று மாலையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இதனையடுத்து அராலி கரையோரப் பகுதி மக்கள் நேற்று மாலை பெருமளவில் அப்பகுதியை விட்டு இடம் பெயரத் தொடங்கினர்.

(உ-125-15)

## 3 கவச வாகனங்கள் சேதம்?

சரவணை, சின்னமடு முகாம் பகுதியிலிருந்து நேற்றுக் காலை படையினர் முன்னேறிய சமயம், அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் மூன்று கவசவாகனங்கள் சேதமடைந்ததாக நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

எனினும் இத்தாக்குதல் குறித்தோ—

அல்லது படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் மேலதிக விபரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

[உ-125]

## தீவகத்தில் மக்கள் பலர் சிக்குண்டு தவிப்பு!

புங்குடுதீவு மற்றும் சரவணை, வேலணை, புளியங்கூடல் பகுதிகளில் பொதுமக்கள் பலர் சிக்குண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புங்குடுதீவில் இருப்போர் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கான பாதை துண்டிக்கப்பட்டிருப்பதால் அங்கு சிக்குண்டுள்ளனர்.

சரவணை, வேலணை, புளியங்கூடல் பகுதிகளில் இராணுவம் முன்னேறிய இடங்களிலும் சுமார் ஐம்பதுக்கும் அதிகமான முதியோர்கள் சிக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

தமது வீடு வாசல்களுக்குக் காவலாகத் தங்கியிருந்தோரும்—

நெற்காணிகளைச் செப்பனிட்டு, விவசாயத்தை மீண்டும் ஆரம்பிக்க அங்கு சென்றோருமே சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-125]

## தீவுப்பகுதி மக்கள் ஐந்து முகாம்களில்

யாழ்ப்பாணம், அக். 19

தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் யாழ். நகரில் ஐந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரை வந்தடையும் அகதிகள் முதலில் ரயில் நிலைய முகாமில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுப் பின்னர் வேறு முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

அடைக்கல மாதா ஆலய முகாமில் 150 குடும்பங்களும், கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலை முகாமில் 166 குடும்பங்களும், வேம்படி மகளிர் கல்லூரி முகாமில் 800 குடும்பங்களும், நல்லூர் சாதனா வித்தியாலய முகாமில் 192 குடும்பங்களும், ரயில் நிலைய முகாமில் 187 குடும்பங்களும் நேற்று வரை பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த ஐந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை அரச

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தீவகத்திலிருந்து நேற்று எஞ்சியோரும் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், அக். 19

தீவுப் பகுதியிலிருந்து நேற்றைய தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் யாழ். நகருக்கு இடம்பெயர்ந்தனர். சாரிசாரியாக மக்கள் நேற்று மாலையிலும் அங்கிருந்து வந்து கொண்டிருந்தனர்.

வேலணை, சரவணை, புளியங்கூடல், - மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே நேற்றுப் பெருமளவு எண்ணிக்கையில் இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை புங்குடுதீவில் பல மக்கள், இப்பால் வர முடியாது சிக்கிக் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் காரணமாக கடந்த முதலாம் திகதி தொடக்கமே தீவகத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருவது தெரிந்ததே.

நிலைமை இவ்வாறு இருந்த போதும் வயதானவர்கள் உட்பட சுமார் 25 சதவீத மானவர்கள் இடம்பெயராது இங்கேயே இருந்தனர்.

ஆனால் நேற்று முன்தினம் மாலையிலிருந்து பதற்ற நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து பிரஸ்தாப பகுதியில் இருந்து எஞ்சியோரில் கணிசமான பகுதியினர் இடம்பெயர்ந்து நேற்றுக் காலை யாழ். வந்து சேர்ந்தனர்.

[அ-181]

### வலி. வடக்கில் பீரங்கி தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 19

நேற்று அதிகாலை 4 30 மணியளவில் வலி. வடக்கில் காங்கேசன்துறை, சேந்தான்குளம், மாதகல் கடற்பிராந்தியங்களில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

கொல்லங்கலட்டி, சேந்தான்குளம், மாசியப்பிட்டி ஆகிய பகுதிகளில் குண்டுகள் வீழ்ந்தன.

[க-68]

### பிரதம நீதியரசர் நியமனம்

கொழும்பு, அக். 19

ஸ்ரீலங்காவின் பிரதம நீதியரசராக நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி பிரேமதாசா இந்த நியமனத்தை வழங்கியிருப்பதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை—

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதியரசராக திரு. இ. பலலிட்ணர் நியமிக்கப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

## வடமராட்சி பகுதியில் நேற்று அசம்பாவிதங்கள் இல்லை!

### இடம்பெயர்ந்தோர் மீளத் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், அக். 19

வடமராட்சியில் நேற்று பெரும் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

இதனையடுத்து, அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் நேற்றிரவு தமது இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

நேற்றுக் காலை மணற்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலையும் —

நேற்று முன்தினமிரவு பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் தொண்டமானாறு, வரீககாட்டுப் பகுதிகளில் விழுந்து வெடித்ததைத் தவிர பெரிய அசம்பாவிதங்கள் எதுவும் வடமராட்சியில் இடம்பெறவில்லை.

வடமராட்சி மக்களை வீடுகளை விட்டு வெளியேறி தேவாலயங்கள் மற்றும் கோயில்களில் போய்த் தங்குமாறு ஸ்ரீலங்கா அரசு கடந்த வியாழக்கிழமை இரவு அறிவித்ததும் —

அதனையடுத்து பல்லாயிரக்கணக்கில் வடமராட்சி மக்கள் இடம்பெயர்ந்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டுவனில் மோதல்

நேற்று அதிகாலை 1 மணியளவில் கட்டுவன், வீமன்காமம் பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றன.

முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் தாக்கி பின் வாங்கச் செய்தனர்.

சுமார் அரை மணி நேரம் மோதல்கள் நீடித்தன.

[ஓ-68]

## வீரமரணம்

மண்கும்பான் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஜீவன் (கனகு லதீஸ்வரன் - ஒட்டுமடம்) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

[உ]

## மணற்காடு பகுதியில் கடும் பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 19

வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் பீரங்கிப் படகுகளில் இருந்து கடும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பீரங்கிக் குண்டுகள் மணற்காடு, நாசரேத் கோவில் பகுதிகளில் விழுந்து வெடித்தன என்றும்—

இதனால் வீடுகள் சில சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை கடற்கரையோரப் பகுதியில் இருந்து படையினர் தாக்குதல்களை நடத்தியதாகவும் கூறப்பட்டது.

[ஓ-117]

## வடமராட்சி மக்களுக்கு விடுக்கப்பட்ட அறிவிப்பு தற்காலிகமானதாம்!

யாழ்ப்பாணம், அக். 19

வடமராட்சி மக்களைக் கோவில்களிலும், தேவாலயங்களிலும் தங்கியிருக்குமாறு பாதுகாப்பு அமைச்சு புதன்கிழமை இரவு வானொலி மூலம் விடுத்த அறிவிப்பு தற்காலிகமான ஏற்பாடாகும் என்று —

புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் திரு. திஸ்ஸ டி. பெரேரா நேற்று யாழ். அரச அதிபருக்குத் தெரியப்படுத்தினார்.

வடமராட்சிப் பகுதி மக்களை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் சென்று தங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வடமராட்சி மக்களுக்கு தென்மராட்சி எங்கும் 14 அகதி முகாம்கள்

தென்மராட்சி, அக். 19

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிக்கு வந்துள்ள மக்களின் நலன் கருதி தென்மராட்சிப் பகுதியில் பதினான்கு இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் முகாம்களில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியுள்ளனர். இவர்களுக்கான ஆரம்ப நிவாரண உதவிகளை தென்மராட்சி தொண்டர் நிறுவனங்கள் செய்து வருகின்றன.

தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் வருமாறு:-

வரணி மகா வித்தியாலயம், சுட்டிபுரம் கண்ணகை அம்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## கோப்பாய் பகுதியில் பத்து அகதி முகாம்கள்

வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களில் ஆயிரத்து இருநூற்றி இரண்டு குடும்பங்களைத் தங்க வைப்பதற்காக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பத்து முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப பத்து முகாம்களிலும் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான குடி தண்ணீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை ஒட்டிசுட்டான, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன கூட்டாகச் செய்துள்ளன.

முகாம்களில் தங்காது வெளியில் தங்கியுள்ளவர்களுக்கு தேவையான உதவிகளையும் இந்த அமைப்புகளின் தொண்டர்கள் செய்து வருகின்றனர்.

இதே வேளை இந்த முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மூன்று நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இலவசமாக வழங்கியது.

[க-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பதுப்பு உத்தியோகத்தர் உடன் தேவை. இளைப்பாறிய பெண்கள் உத்தியோகத்தர் 25 — 45 வயதெல்லைக்கு உட்பட்டவர்கள், நல்ல ஒழுக்கம், உயரம் உடையவர்கள் விரும்பத்தக்கது. வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானக் கணக்கியல் பகுதியில் சமுகம் கொடுக்கவும். நல்ல சம்பளம் வழங்கப்படும். [18494]

### மணமகன் தேவை

யாழ் இந்து, 30 வயது B. Sc ஆசிரியைக்கும் 31 வயது எக்கவுண்டனுக்கும், 32 வயது டாக்டருக்கும் [டென்ரல்] மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி. கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [18492]

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து, 7 ஆம் செவ்வாய்க் குற்றமுள்ள, பாவம் குறைந்த 31 வயது B Sc சிவில் பொறியியலாளருக்கும், குற்றமற்ற தோச்வே 26 வயது டாக்டருக்கும் குறைந்தது B Sc பெண் தேவை. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். (18493)

### அம்பாள் திருமண சேவை

31 வயது B. Sc., 30 வயது B. Sc., 36 வயது B. Sc. ஆகிய சைவ மணப்பெண்களுக்கு மணமக்கள் தேவை. விண்ணப்பப் பத்திரம் ரூபா 50/-. நேரில் சந்திக்க விரும்பியோர் ஞாயிற்றுக்கிழமை களில் சந்திக்கவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் [18135]

## அறிவித்தல்

புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ. சங்கத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் கடமைக்காக 19 - 10 - 91 சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டில் உள்ள சிறாம்பியடி லேன் யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்க காரியாலய மேல் மாடியில் தற்காலிகமாக இயங்கும் காரியாலயத்திற்கு சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்;

சி. முத்துவேலு,
பொது முகாமையாளர்,
புங் நயி. ப. நோ. கூ. ச
[சி/835]

## 93 A/L

★ [விஞ்ஞான பாடங்கள் மட்டும்]

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

இன்று ஆரம்பம்:
19 — 10 — 1991
[சனி காலை 7 மணி]

ஏமாற்றத்தை தவிர்க்க அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

*NEW MASTER INSTITUTE*
JAFFNA.
[சி-0707]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L இறுதிப் பிரிவுகள் PAPER CLASS

DAY CLASS (8 - 30 — 2 - 00)
EVENING CLASS (4 - 00 — 6 - 00)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு!

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R ஸ்ரீ |
| கணிதம் | — திரு. ஜெயன் |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — திரு. கோப்பாய் சிவம் |
| சமூகக் கல்வி | — திரு. கோபி |
| வர்த்தகம் | — திரு. குணராசன் |
| சமயம் | — திரு. சசிகர் |

ஆரம்பம்: 21 — 10 — 1991

மு. குறிப்பு: விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
டமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
[சி/0735]

## ஓராண்டு நினைவஞ்சலி

20 - 10 - 1991



திருமதி
### மேரி அக்னெஸ் அரியநாயகம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 20 - 10 - 91 ஞாயிறு காலை 10-30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் பங்குகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், குடும்பத்தினர்.

அச்சுவேலி. [18490]

## காணவில்லை



எனது மகன் கந்தசாமி தனிகை டத்த 24-7-1991 தொடக்கம் காணவில்லை. கல்வி பயிலச் சென்றவர் வீடு திரும்பவில்லை அவர் தங்கச் சங்கிலி (ஒன்பவுண்), தங்க மோதிரம், கைக்கடிகாரம் ஆகியன அணிந்திருந்தார் 'ஏசியா லேடீஸ் பைக்'' சைக்கிளில் சென்றிருந்தார்.

இவர் பொது நிறமானவர். உயரம் 5 அடி 4 அங்குலம். தலைமயிரைக் கட்டையாக வெட்டி இருப்பார். சாயிபாபாவின் படத்துடன் கூடிய மாலையும், மோதிரமும் அணிந்திருப்பார்.

இவரைக் கண்டவர்கள் அல்லது வேறுவிதமாக தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி நல்லம்மா கந்தசாமி.
19, கவ மியார் வீதி,
கொழும்புத்துறை. (18478)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### க. கணேசபிள்ளை

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர், சமூக சேவைப்பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

மலர்வு: 22 - 3 - 1919
மறைவு: 29 - 10 - 1990

இன்று 19 - 10 - 1991 ஆம் திகதி எமது இல்லத்தில் அவரது ஆத்ம சாந்திக்காகவும், ஓராண்டு நினைவாகவும் நடைபெறவிருக்கும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

44/7, சங்கிலியன் வீதி,
நல்லூர். (18498)

## 31 ஆம் நாள் வீரவணக்கம்



மலர்வு: 25 5-1964
மாவீரம்: 19-9 1991

### மேஜர் டேவிட் (செழியன்)
### வே. கா. குணரத்தினம் செல்வகுமார்

மரணத்தை ஏற்றுப் பழகிய மனதிலும் கண்ணீர் துளிர்க்கிறது - நீ
வாழ்க்கையில் காட்டிய வீரச் செயல்களை நெஞ்சு நினைக்கிறது
எத்தனை முறை நீ போர்க்களம் சென்றாய். சாவின் அருகிருந்தாய் - எதிரி
சுற்றி வளைக்கையில் சுட்டபடி நீ முற்றுகை உடைத்து வந்தாய்
செட்டிகுளத்திலே எதிரியின் குண்டுகள் பட்டது உன் மார்பில் - நீ
காட்டிய வழிதான் நன்கு தெரியுதுன் ஆயுதம் எம் கையில்.

பெற்றோர், சகோதரர்
குடும்பத்தினர், நண்பர்.

இராசேந்திரங்குளம்,
வவுனியா. (18495)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

91 PAPER CLASSES

பௌதிகவியல் - திரு. குணராஜா [4-30 மணி]
92 தமிழ் - திரு. குழந்தைவேல் (1 மணி)

புதிய பிரிவு
ஆரம்பம்- 20 - 10 - 1991
[சி-0734]

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 3 — 4 — 1967
உதிர்வு: 9 — 9 — 1991

### அமரர் கனகசுந்தரம் அருந்தவராசா

திதி: 20-10-1991

20-10-91 திதி நாள் அன்று அன்னாரது இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

மனைவி - ரதி, மகள் - விஜிதா,
தாயார்.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை. [4349]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 26 — 02 — 1976
மாவீரம்: 22 — 07 — 1991

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்த

### ● வீரவேங்கை மணிவாசன் ●
[கணேசநாதன் - ஜனார்த்தனன்]

கண்ணன் போன்ற தோற்றமுடன்
களிப்புச் சேர்ந்த முகத்தழகா
அண்ணன் எனவே குடும்பத்தின்
அருமை முத்தாய் வந்தவனே
கண்ணின் அழகும் களிப்புடனே
சிரிக்கும் முறுவற் சிரழகும்
எண்ண எண்ண இதயத்தே
ஏக்கம் கொள்ள வைக்குதடா
களத்தில் நாட்டம் காட்டிய நீ
கண்முன் இன்னும் நிற்கின்றாய்
தொலைத்த சன்னம் ஊடுருவி
தூய உயிரைப் போக்கிடினும்
அழுதே நாங்கள் நிற்கின்றோம்;

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

இல. 63, 'கௌரிவாசம்',
காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு. (18478)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இன்றைய தேவை

இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த ஆரம்பித்துவிட்டது. அதன் விளைவாக மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வருகிறார்கள். தற்போது குறிப்பாக, வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்தும், தீவகப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி உள்ளனர்.

நாளாந்தம் அதிகரித்துவரும் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான தங்குமிட வசதி, உணவு வசதி, சுகாதார வசதி என்பனவற்றை உடனடியாகச் செய்து உதவுவதில் கஷ்டங்கள் தோன்றியுள்ளன.

ஆனால் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு அதிகாரிகள், அத்தியாவசிய சேவைகள் நாயகம் பகுதி அதிகாரிகள் குடாநாட்டில் இடம் பெயர்ந்து கஷ்டமுறும் மக்களுக்கு உதவுவதில் அக்கறை காட்டவில்லை.

அரசாங்கத்தின் ஓர் அங்கமான படையினரின் நடவடிக்கையால், தங்கள் சொந்த மண்ணிலேயே, தங்கள் சொந்த வீடுகளில் இருந்து, பாடுபட்டுத் தேடிய சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு, ஒரு சில நிமிட நேரங்களில் வெளியேற நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் தமிழ் மக்கள்.

தங்கள் உயிரைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற நோக்கம் ஒன்றே முதன்மைப்பட்டு நிற்க, அவர்கள் கையில் கிடைத்ததோடு, பிள்ளை குட்டிகளையும், வயதானவர்களையும் இழுத்துக் கொண்டு இடம் பெயர்கிறார்கள். போக்குவரத்து வசதி இல்லாதிருந்தும், நடந்தும், ஓடியும், மழையில் நனைந்தும், இருளில் வீழ்ந்தும் தூர இடங்களைப் போய்ச் சேர்கிறார்கள். சாதாரண குடிமக்கள் என்ற நிலையிலிருந்து ஒரு சில மணி நேரத்தில் அகதிகளாக மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்!

ஆனால், இடம்பெயர்ந்தவர்களுக்கும், அகதிகளுக்கும் உதவுவதற்கென்றே அரசு உருவாக்கிய புனர்வாழ்வு அமைச்சும், அத்தியாவசிய சேவைகள் நாயகம் பகுதியும் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு உதவிசெய்யப் பின்னடிக்கின்றன; மறுக்கின்றன.

வடமராட்சி, தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்யலாம் என்று முடிவு எடுப்பதற்கு அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு இரண்டு நாட்கள் தேவைப்படுகின்றன!

அரசின் இந்த அக்கறையில்லாத — வேண்டாவெறுப்பான போக்கு - எதிர்பார்க்கப்பட்டது தான்; வழக்கமானது தான். புனர்வாழ்வு அமைச்சும், அத்தியாவசிய சேவைகள் நாயகம் பகுதியும், பிறவும் வெளி உலகத்தை ஏமாற்றுவதற்கான அரசாங்கத்தின் முகவர்கள் என்பது தெரிந்த விடயமே. தமிழர்களுக்குத் தாம் மனிதாபிமானத்துடன் உதவுவதாகக் காட்டிக்கொண்டு வெளிநாடுகளிடம் இருந்து பணம் பறிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஏஜென்சிகள் அவை!

எனவே, இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு வசதிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பின் பெரும் பகுதி, தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் தொண்டர் நிறுவனங்களையே சார்ந்து நிற்கின்றது. அவற்றுக்குப் பக்கத்துணையாக இடம்பெயராத மக்களும் உதவவேண்டும். இதுவே இன்றைய தேவையும், அகதிகள் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கான ஒரே வழியும் ஆகும்.

செய்தியாளர் மீதான நடவடிக்கை:

## இந்திய அரசாங்கம் ஸ்ரீலங்காவிடம் ஆட்சேபம்

இந்திய வானொலியின் கொழும்புச் செய்தியாளர் ஏ. சருப்புச மிஸ்ர ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறும்படி கொழும்பு அரசு உத்தரவிட்டதை இந்தியா வன்மையாக ஆட்சேபித்துள்ளது.

இதுதொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் அலுவலகம், ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சிடம் நேற்று ஆட்சேபக் குறிப்பு ஒன்றைக் கையளித்தது.

செய்தியாளர்களுக்கு எப்போதேனும் தவறுகள் நேர்வது வழக்கமே என்றும் அந்த ஆட்சேபக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சபாநாயகர் மறுப்புத் தெரிவித்ததும் ஆகாசவாணியும் தூரதர்ஷனும் முந்திய செய்தியை திருத்தி ஒலிபரப்பின என்றும்—

இந்திய அரசாங்கம், இந்தியப் பத்திரிகைகள் ஆகியவற்றுக்கும் இந்தியச் செய்தியாளர்களுக்கும் ஸ்ரீலங்காவின் தகவல் அமைப்புகளில தொடர்ந்து தவறான செய்திகளை வழங்கிவருகின்றன என்றும்—

அந்த ஆட்சேபக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய பிரசாரம் இந்திய—ஸ்ரீலங்கா உறவுகளை வலுப்படுத்த உதவாது என்பதால் இது நிறுத்தப்படும் எனத் தாம் நம்புவதாக இந்தியவின் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-த)

## விவசாயிகளுக்கு துலா வசதி ஆய்வு நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம், அக் 19

விவசாயிகளுக்கு 'துலா' செய்து கொடுப்பதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

சிறுதானியம் மற்றும் நெல்பயிர் தவிர்ந்த உணவுப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கே 'துலா' வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

25 வீத மானியத்திலும் 75 வீத கடன் அடிப்படையிலும் இத்திட்டம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'துலா' தேவையான சகல விவசாயிகளும் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக தமிழீழ ஆய்வு நிறுவனம், மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக் 19

குடாநாட்டில் உள்ள சகல தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களையும் நாளை (ஞாயிறு) முற்பகல் 10 மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு நிதர்சனம் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

## புலிகள் ஆதரவாளர் ஐவர் கைதாகினர்

சென்னை, அக் 19

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படும் 5 இளைஞர்களை தமிழக காவல் துறையினர் நெய்வேலியில் நேற்று முன்தினம் கைது செய்தனர். (த)

## தீவுபகுதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அனுசரணையுடன் சர்வோதயம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மெதடிஸ்த திருச்சபை, சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய அமைப்புகள் பராமரித்து வருகின்றன. (அ-8-131)

## வடமராட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்களுக்கு ...

வடமராட்சி பகுதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதியில் தஞ்சம் புகுந்திருப்பதும் தெரிந்தவையே. (உ-15)

## தென்மராட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மன் கோவில், மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கச்சாய் அம்மன் கோவில், அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மட்டுவில் மகா வித்தியாலயம், சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை.

இவற்றைவிட உறவினர் வீடுகளிலும் பலர் தங்கியுள்ளனர்.

அதேவேளை, வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து மருதங்கேணி முதல் சாவகச்சேரி, கொடிகாமம் வரை வரணி, மந்துவில், மிருசுவில், கட்டைப்புரம் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு முகாம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முகாம்களை நிர்வாகம் செய்து, அங்கு தங்கியுள்ள மக்களைப் பராமரிக்கும் பொறுப்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை, அறவழிப் போராட்ட குழு, சர்வோதயம் ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. (உ-117-2)

அலுவலகம், புதன்கிழமை இரவு 9 மணிக்கும் கொழும்பு வானொலி மூலம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து புதன்கிழமை இரவே வடமராட்சி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி தூர இடங்களுக்குச் சென்றிருந்தனர்.

கோவில்களிலும், தேவாலயங்களிலும் மக்களைத் தங்க வைப்பதற்கும் போதிய சுகாதார வசதியில்லை. ஆகவே அவர்களுக்கென அகதிமுகாம் அமைக்கவும் —

அவர்களுக்கு உலர் உணவு வழங்கவும்— அனுமதி தருமாறு யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், வியாழனன்று புனர்வாழ்வுத் துறை அமைச்சிடம் கேட்டிருந்தார்.

அதற்கான பதிலை அமைச்சின் செயலாளர் நேற்று அறிவித்திருந்தார். அந்தப் பதிலிலேயே, வடமராட்சி மக்களை ஆலயங்களில், தேவாலயங்களில் தங்குமாறு கேட்டது தற்காலிகமான ஏற்பாடு என்று திரு கிறிஸ்டி குறிப்பிட்டிருக்கிறார்.

வடமராட்சி மக்களுக்கு மூன்று நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கவும் செயலாளர் அங்கீகாரம் அளித்திருக்கிறார். (அ-3)

## ஊரடங்கு மத்தியில் பரிசளிப்பு விழா; தமிழர் நிலையைக் காட்டுகிறது!

### சென் பற்றிக்ஸ் நிகழ்ச்சியில் ஆயர் அம்பலவாணர் உரை

குருநகர், அக். 19

''ஊரடங்குச் சட்டத்தின் மத்தியில் இத்தகைய பரிசளிப்பு விழா நடைபெறுவது இந்த நாட்டில் தமிழர் நிலையைப் பகிரங்கப்படுத்துவதாக இருக்கிறது.''

சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று நடந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தென் இந்திய திருச்சபையின் அத்தியட்சாதின ஆயர் டி. ஜே. அம்பலவாணர் இவ்வாறு கூறினார்.

கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா, கல்லூரி மதுரம் சதுக்கத்தில் நேற்றுக் காலை யாழ் ஆயர் அதி. வண. பிதா வ. தியோகுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

ஆயர் அம்பலவாணர் அங்கு மேலும் கூறியதாவது:-

''என்னை பிரதம விருந்தினராக இங்கே இவர்கள் அழைத்து உள்ளமை எனக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது.

இருவகை கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த நாம் இங்கே ஒன்றிணைந்து இருப்பது எனக்கு மகிழ்வூட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவின் செய்தியை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லும் இரு சபைகளுக்கும் இடையில் இந்நிலை எதிர்காலத்தில் நன்மை பயக்கும் என நம்புவோம்— என்றார்.

கல்லூரி அதிபர் வண. ஜி. எ. பிரான்ஸிஸ் யோசெப் அடிகள் கல்லூரியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:-

''கடந்த கல்வியாண்டில் எமது கல்லூரியை 8 விமானக் குண்டுகளும், 34 பீரங்கி மற்றும் ஷெல் குண்டுகளும் தாக்கிச் சேதப்படுத்தின.

இதன் நடுவிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வியை முன்னெடுக்க கல்லூரி நிர்வாகம் முயன்றதை நினைத்துப் பார்க்க வேண்டும்'' என்றார்.

ஏ. சி. செபநாயகம், ஜி. யோசெப்யூட் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

ஆயர் டி. ஜே. அம்பலவாணர் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

## பிரபாகரனின் மனைவியார் கட்டுநாயக்கா வந்தாராம்

### சுதந்திரக் கட்சி எம். பி. புரளி!

கொழும்பு அக். 19

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் மனைவியும் பிள்ளைகளும் கட்டுநாயக்காவில் இருந்து நெடுங்கேணிக்கு ஹெலிக்கொப்டரில் அழைத்துச் செல்லப்பட்டதாக எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் புரளி கிளப்பியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பியான திரு. சி. வி. குணரத்னா இம்மாதம் 11 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய வேளை கேள்வி நேரத்தின் போது இது சம்பந்தமாகப் பிரதமரிடம் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார்.

பிரதமர் சார்பில் இக்கேள்விக்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் மீது சேறு பூசும் எதிர்க்கட்சிப் பிரசாரத்தில் இது ஒரு பகுதியாகும் என்று கண்டித்தார்.

சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்றுவிட்டதால், எதிர்க்கட்சியினர் இவ்வாறு சேறு பூசும் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

திரு குணரத்னா கேட்ட கேள்வி வருமாறு:-

(அ) மிக அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனின் மனைவி தமது பிள்ளைகளுடன் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்திருந்தார்?

(ஆ) பிரபாகரனின் மனைவியும், பிள்ளைகளும் பாதுகாப்புடன் கட்டுநாயக்காவில் இருந்து நெடுங்கேணிக்கு முழுப் பாதுகாப்புடன் கூட்டிச் செல்லப்பட்டனர்? திரு. பிரபாகரன், அவர்களின் வரவை எதிர்பார்த்து ஏற்கனவே நெடுங்கேணியில் காத்திருந்தார்.

(இ) கட்டுநாயக்காவில் இருந்து நெடுங்கேணிக்குக் கூட்டிச் செல்லப்படும் வரை, தீர் கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அவர்கள் தங்கியிருந்தனரா?

(ஈ) எங்கள் தேசிய பாதுகாப்புக்கு பெரும் ஆபத்தான இந்த விவகாரம் எப்படி நடந்தது? இதற்கு யார் பொறுப்பு? என்பதைப் பிரதமர் இந்தச் சபைக்குக் கூறுவாரா?

எங்கள் படை வீரர்கள் ஆயிரக்கணக்கில் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டும், அங்கவீனராக்கப்பட்டும் வரும் இவ்வேளையில், இந்தச் செயலுக்குப் பொறுப்பானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்?

## குண்டு வீச்சினால் இழுவைப்படகு சேதம்

யாழ்ப்பாணம், அக் 19

பருத்தித்துறை இறங்குதுறையில் நேற்று முன்தினம் பொம்மர்கள் மேற்கொண்ட தாக்குதலில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த இழுவைப்படகு ''மார்ஜ்'' ஒன்று சேதமடைந்தது.

இந்த இழுவைப்படகு மூலமே பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்படுவதுண்டு.

வியாழக்கிழமை மாலை நடந்த இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதல் குறித்தும், உணவுக் களஞ்சியம் சேதமடைந்தமை குறித்தும் அரசாங்க அதிபர் புனர்வாழ்வு அமைச்சுக்கு நேற்றுத் தகவல் அனுப்பினார். (அ-3)

## அல்லைப்பிட்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பொம்மர்கள், இரு ஹெலிக்கொப்டர்கள் ஆகியன புளியங்கூடல், வேலணை சரவணை, மண்கும்பான், மண்டை தீவுப் பகுதிகளில் கடும் வான்தாக்குதல்களை நடத்தின.

ஆயிரக்கணக்கான படையினர் சின்னமடுவிலிருந்து வடக்கு வீதி, செருக்கன் வீதி ஆகியன ஊடாக இருபிரிவாக முன்னேறினர்.

முன்னேறி வந்த படையினருடன் விடுதலைப் புலிகள் ஆங்காங்கே மோதினர்.

இந்த மோதல் சம்பவங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை.

நேற்று மாலையில் படையினர் அல்லைப்பிட்டி வரை முன்னேறியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் முன்னேறி வந்த பகுதிகளில் இருந்து, பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வெளியேறியிருந்ததால், பெருமளவு உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

எனினும் படையினரின் விமானக்குண்டு வீச்சினால் வேலணை, சாட்டி, புளியங்கூடல், சரவணை, மண்கும்பான் பகுதிகளில் பல வீடுகள், கட்டடங்கள் என்பன கடும் சேதத்திற்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-15-51-167-125-131-3)

## அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 19

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் ஓய்வு பெற்றுச் செல்வதால், கல்லூரியின் இன்டரக்ட் கழக உறுப்பினர்களையும், முதலுதவிப் பிரிவு உறுப்பினர்களையும் பாடசாலைச் சீருடையுடன் இன்று காலை 8 மணிக்கு சமூகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

## தகவல் வெளியிட அதிகாரி மறுப்பு

கொழும்பு, அக் 19

''தற்போது வடக்கே நடக்கும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து— யுத்த தந்திரம் கருதி — தகவல் வெளியிடமுடியாது''

—இப்படி கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார். (இ-த)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக். 19

இன்று நடைபெறவிருந்த அரியாலை சனசமூக நிலைய 42 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாக நிலைய பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 19

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை (ஞாயிறு) நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## கடன் தள்ளுபடி

ஹராரே, அக். 19

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள—காமன்வெல்த் அமைப்பில் இடம்பெற்றுள்ள—நாடுகளுக்கு பிரிட்டன் கடனாக வழங்கிய 1,700 கோடி டாலர், ஒரு தரப்பாக தள்ளுபடி செய்யப்பட உள்ளது.

## பத்திரிகையாளர் தாண்டிக்குளம் தாண்ட கட்டுப்பாடு

கொழும்பு, அக். 19

தாண்டிக்குளம் ஊடாக வடபகுதி வருவதற்கு உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்கள் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் அனுமதி பெறவேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-த)

## 18 முஸ்லிம்கள் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு, அக். 19

மட்டக்களப்பு, கறுவாஞ்சிக்குடிப் பகுதியிலிருந்து 18 முஸ்லிம் இளைஞர்களை ஆயுதபாணிகள் கடத்திச் சென்றிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஐப்பசி மாதம் 4-ஆம் நாள் (21 - 10 - 1991) திங்கட்கிழமை பிற்பகல் 2-10 மணிமுதல் 3-32 மணிவரை உள்ள

★ சுப முகூர்த்தத்தில் ★

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் ★ பாலசிங்கம் ★ அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி ★ ராதா ★ அவர்களுக்கும் |

இறைவன் அருளால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ள திருமண வைபவத்தில், தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி பசுபதிப்பிள்ளை, [சரவணை கிழக்கு, வேலணை] 20, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். | திரு. திருமதி கிருஷ்ணபிள்ளை, [புளியங்கூடல், ஊர்காவற்றுறை] 329/3, பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |

(இது வீட்டார் அழைப்பு)

(18496)

## தகவல் தரவும்

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை பொன்னாச்சி என்பவர் கடந்த வியாழக்கிழமை (17-10-91) இரவு அகதியாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை, வேலணைப் பாலத்தடியில் விழுந்து மண்டை உடைந்ததாக அறிந்தோம். எனினும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ். ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகாமையில் உள்ள அருமை போசனசாலையில் விபரம் தெரிவிக்குமாறு அல்லது அவரை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இளையதம்பி
சின்னத்துரை
699/2, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## A/L 93

19 - 10 - 1991 முதல்

நாவலரியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்

கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்

(இ/0809)

## விசேட ஆங்கில வகுப்புகள்

To Help You
Begin, Build up & Enrich Your English

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்கள்!!

இன்று ஆரம்பம்; 19-10-1991 9 a.m

க. பொ. த. சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குரிய

**AN INTEGRATED ENGLISH**

[6 மாதகாலப் பயிற்சி]

ஆரம்ப அறிவு குறைந்தவர்களுக்கான

**SPECIAL BASIC ENGLISH**

[3 மாதகால துரிதப்பயிற்சி]

- ★ Speech Practice
- ★ Grammar & Usage
- ★ Vocabulary Enrichment
- ★ Practice in Writing
- ● வகுப்புகள் சனி, ஞாயிறு.
- ● அச்சடித்த பாடக்குறிப்புகள்.

**அஸ்ரன்** கல்வி நிறுவனம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[இ-0719]

## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

A/L 93 | பிரிவு-2 |

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| தமிழ் | — | புலவர் சிவா |
| இந்து நாகரீகம் | — | திரு. திருநாவுக்கரசு |
| புவியியல் | — | திரு. ஜோசப் |
| அரசியல் | — | திரு. செல்வா |
| தாவரவியல் | — | திரு. செல்வநேசன் |
| தூய / பிரயோக கணிதம் | — | திரு. ஈசன் |

இன்று ஆரம்பம் 19 - 10 - 1991
மாலை: 1-00 மணி

★ முக்கிய குறிப்பு:
100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.

(சி/0832)

## St. John's College, Jaffna and Chundikuli Girl's College, Jaffna.

### அறிவித்தல்

ஆண்டு - 6 ஆண்டு - 10, பிரவேசப் பரீட்சை

1. இன்று (19-10-1991) நடைபெற இருந்த பிரவேசப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
2. பரீட்சைக்கான புதிய திகதி பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

- அதிபர்கள்

## அறிவித்தல்

1991 அக்டோபர் 19, 20 ஆம் திகதிகளில் மேடையேற்றப்படவிருந்த

"செந்தூது" [நாட்டுக் கூத்து]

மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், [C/834]

## மரண அறிவித்தல்

### நடராஜா இராசரத்தினம்

[எஸ். கே. கனகரத்தினம் ஸ்டோர்ஸ், வவுனியா]

காரைநகர் களித்தெரு தங்கோடையைச் சேர்ந்த அம்பலவாணர் நடராஜா இராசரத்தினம் காலமானார்.

இவர் செல்வராணியின் அன்புக் கணவரும், நடராசா - கமலாதேவியின் அன்பு மகனும், சபாரட்ணம் - வள்ளியம்மையின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி, இராஜகுமாரி, சூரியகுமாரன் [விதி அபிவிருத்தி அதிகார சபை, முல்லைத்தீவு], நந்தகுமாரன் ஆகியோரின் சகோதரரும், ச. விமலச்சந்திரன், ச. முத்தையாபிள்ளை, ச. தர்மகுலசிங்கம் [ஈழநாதம்], ச. சிவஞானசுந்தரலிங்கம் [உதயன்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு மூளாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மூளாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

| | |
|---|---|
| மூளாய் றோட், மூளாய். | சிவஞானசுந்தரலிங்கம் |

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 13 — 03 — 1983

அதியாய அழிப்பு: 19 — 10 — 1987

### சற்குணம் சத்தியப்பிரியன்

நாலாண்டு சென்றதையா நாம்பெற்ற செல்வமகனே! உன்னிழப்பைத் தாங்காது உருவிழந்து, மகிழ்விழந்து கருகி நிற்கின்றோமையா! உன்னை இழந்த நாலாம் ஆண்டாகிய இன்று உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உன் முகம் காணாத தம்பி, தங்கை.

125/11, பாலை வளவு,
அரியாலை.

(18502)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி வீரகத்தி இரத்தினம்மா

| | |
|---|---|
| மலர்வு: 07-05-1907 | உதிர்வு: 19-09-1991 |

அம்மா! எங்கள் பாசமும், பண்பும் நிறைந்த குலதெய்வமே! எங்கள் நல்வாழ்வுக்கும், உயர்விற்கும் வழிகாட்டியவளே! உங்கள் திருவுருவம் என்றும் இதயத்தில் நிறைந்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திப் பூசையில் கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

குணரத்தினம், அன்னலக்ஷ்மி,
மகேஸ்வரி, புனிதவதி,
யோகேஸ்வரன், பாலசிங்கம்,
இராசரத்தினம், செல்லம்மா,
மற்றும் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

முருகன் வீதி,
திருநெல்வேலி.

(18497)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org